**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4256/ஆ5/2023, நாள். 18.10.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – புதிய தலைமுறை தொலைக்காட்சி – "வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்ற அறிவியல் கண்காட்சி நிகழ்ச்சி – 28.10.2023 (சனிக்கிழமை) அன்று – வேலூர், தொரப்பாடி, வேலம்மாள் போதி கேம்பசில் நடைபெற உள்ளது – ஆர்வமும் திறமையும் உள்ள மாணவர்கள் கலந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை புதிய தலைமுறை நிறுவனக் கடிதம்.

•••••

பார்வையில் காணும் கடிதத்தில், புதிய தலைமுறை என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தால் "வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்ற நிகழ்ச்சியினை வழங்கி வருவதாகவும், மனிதகுலத்தின் நலனுக்காக புதுமையும் எளிமையும் இணைந்த புதுப்புது கருவிகளைக் கண்டுபிடிக்கும் புதிய விஞ்ஞானிகளையும் அவர்களது கண்டுபிடிப்புகளையும் அறிமுகப்படுத்தி கௌரவிப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கம் எனவும், இந்த நிகழ்ச்சியை வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் அறிவியல் ஆர்வமுள்ள மாணவர்கள் பங்கேற்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்ற அறிவியல் கண்காட்சி நிகழ்ச்சி வேலூர் மாவட்டத்தில் **28.10.2023 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணி அளவில் வேலூர், தொரப்பாடி, வேலம்மாள் போதி கேம்பசில்** நடக்கும் நிகழ்ச்சியில் அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் போட்டியில், ஆர்வமும் திறமையும் உள்ள மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு கீழ்காணும் தலைப்புப்படி தங்களது அறிவியல் படைப்புகளைசெயல்படுத்திக்காட்டி, அவர்களது திறமையினை வெளிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் போட்டியில் கலந்துக் கொள்ளும் மாணவர்களை பொறுப்பாசிரியருடன் அனுப்பிவைக்க அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமையாசியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**<u>தலைப்பு –</u>**

1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
   (Examples : Drone, Internet over thinking, Artificial Intelligence Machine Learning, SG and Big Data Analysis)

**(அல்லது)**

2. இயற்கை வளம் பாதுகாப்பு

**(அல்லது)**

3. மக்களின் வாழ்க்கைக்கும் பாதுகாப்பிற்கும் உதவிகரமான கண்டுபிடிப்புகள்.

(குறிப்பு – அனுமதி இலவசம், ஒரு அணிக்கு இருவர் வீதம் ஒரு பள்ளிக்கு எத்தனை அணிகள் வேண்டுமானாலும் பங்குபெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.)
தொடர்புக்கு தொலைபேசி எண். 9994499524, 8754417330)

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள். வேலூர் மாவட்டம்.
நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (தங்கள் கட்டுப்பட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது)
2. திரு G. உமாபதி,
   மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
   வேலூர் மாவட்டம்.